பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 20 சனிக்கிழமை 03.05.2025 கதிர் 175

இது ரகசியம் அல்ல!

"அப்பு ஆச்சி ஆண்ட மண்ணை அப்புகாமிகள் ஆள்வதா?" இது 15 வருடங்களுக்கு முந்திய போர்ப் பறை அறைகூவல் அல்ல. தமிழ் அரசுக் கட்சியின் ☞ 2

### வடக்கு கிழக்கில்

# 23 சதுர கிமீ நிலப் பகுதியில் இன்னும் கண்ணிவெடிகளை அகற்றவேண்டும்

வடக்கு மற்றும் கிழக்கில் சுமார் 23 சதுர கிலோ மீற்றர் நிலப் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டி உள்ளன என்று பிரதமர் ஹரினி தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றுவது என்பது பௌதீக ஆபத்துகளை அகற்றுவது மட்டுமல்ல, மக்களின் கண்ணியம், வாழ்வாதாரம் மற்றும் அமைதியானவாழ்க்கைநிலைமைகளை மீட்டெடுப்பதற்கான ஒரு தேசிய



தேவையாகும்என்றும்அவர்தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள காலி முகத்திடல் ஹோட்டலில் நேற்று நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறைமற்றும்வீடமைப்புஅமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை திட்டத்தின் நன்கொடையாளர் ஒருங்கிணைப்பு மற்றும் பாராட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மோதல்களுக்குப் பின்னர் எழுந்த ஒரு தேவையாக இருந்தாலும், கண்ணிவெடி அகற்றல் என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த செயன்முறை பௌதீக ஆபத்துகளை அகற்றுவது மட்டுமல்ல, மக்களின் கண்ணியம், ☞ 8

# பொலிஸ் காவலில் மற்றொரு இறப்பு

### தொடரும் அவலம்

பொலிஸ் காவலில் இருந்த இளைஞர் ஒருவர் கொஸ்கொடவில் உயிரிழந்தார். போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற ☞ 8

# இன்றிரவு வியட்நாம் புறப்படுகிறார் அநுர

ஜனாதிபதிஅனுரகுமாரதிசாநாயக்கஇன்றிரவு அரசு முறைப் பயணமாக வியட்நாமிற்குப் புறப்படுகிறார்.

நாளை முதல் மே 6 வரை வியட்நாமில் தங்கியிருக்கும்ஜனாதிபதிஇருநாடுகளுக்கும் ☞ 8

### 6 ஆயிரம் ஏக்கர் காணி சுவீகரிப்பை கைவாங்க

# மே 28 வரையும் காலக்கெடு மறுத்தால் பெரும் போராட்டம்

## தமிழ் அரசுக் கட்சி நேற்று அறிவிப்பு

**யாழ்ப்பாணம் முதல் முல்லைத்தீவு வரையில் தமிழ் மக்களின் சுமார் 6 ஆயிரம் ஏக்கரல் காணிகளை அரசுடமையாக்குவதற்கான ஆளும்தரப்பின் வர்த்தமானி அறிவித்தலைத் திரும்பப்பெறஆளும்தரப்புக்குதமிழ்அரசுக்கட்சி மே 28 வரை ஒரு காலக்கெடு வழங்கியுள்ளது. அதற்கிடையில்ஆளும்தரப்பு உரியநடவடிக்கை எடுக்கவில்லைஎனில்காணிகளைமீட்கப்பெரும் சட்டமறுப்புப் போராட்டத்தில் குதிப்போம் என்று அக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் நேற்று அறிவித்தார்.**

**அரசுடமையாக்கப்படுவதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கும் காணிகளின் உரிமையாளர்களைநேற்றுவெற்றிலைக்கேணியில் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர், சட்டத்தரணிகள் குழுவினருடன் சென்று** ☞ 2

### பஹல்காம் தாக்குதலைக் கண்டித்து

# பாக். தூதரகம் முன் நேற்றும் போராட்டம்

கொழும்பில்அமைந்துள்ளபாகிஸ்தானிய உயர் ஆணையத்திற்கு முன்பாக நேற்றும்ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

காஷ்மீர், பஹல்காமில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக தேசிய கூட்டணியின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து "தீவிரவாதத்துக்கு எதிரான ஒரு அமைதி" என்ற தொனிப்பொருளில் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தை ☞ 8

# தீயில் கலந்து ஜோதியானார் நல்லை ஆதீனக் குருமணி

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வியாழக்கிழமை இரவு பரிபூரணமடைந்த நிலையில் நேற்று அவரது திருவுடல் செம்மணி இந்து மயானத்தில் தீயில் கலந்தது.

சுகவீனமுற்று கொழும்பில் சிகிச்சை பெற்றுவந்த





நிலையிலேயே நல்லை ஆதீன குரு முதல்வர் வியாழக்கிழமை பரிபூரணமடைந்தார். சுவாமிகளின் திருவுடல் வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்திற்குக் கொண்டுவரப்பட்டு பூரணத்துவக் கிரியைகள் இடம்பெற்றன.

சர்வமதத் தலைவர்கள், ☞ 8

### மன்னார், அடம்பன் பகுதியில்

# வாக்காளர்களுக்கு வழங்க இருந்த பாய், படுக்கை விரிப்புகள் சிக்கின

உள்ளூராட்சித் தேர்தலில் மக்களுக்குலஞ்சம்வழங்குவதற்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பாய்கள் மற்றும்படுக்கைவிரிப்புக்கள்என்பன மன்னார்மாவட்டம்அடம்பனில்உள்ள ஒருவீட்டில்இருந்துகைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

1400பிளாஸ்டிக்பாய்கள்கொண்ட 28 பார்சல்களும், 1400 படுக்கை விரிப்புகள் கொண்ட 14 பார்சல்களும் இவ்வாறு கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தலுக்காக வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காககிராமத்தில் ☞ 8

# போதைக் கும்பல் நபர் கொன்று எரிக்கப்பட்டார்

### கல்கிஸையில் உடல் மீட்பு

கல்கிசையின்ஹுலுடகொட பகுதியில், கூர்மையான ஆயுதங்களால் கொடூரமாக தாக்கப்பட்டு, பின்னர் தீ வைத்துளிக்கப்பட்டஒருவரின் உடல் கண்டெடுக்கப்பட்டது.

இறந்தவர் ரத்மலானை, மஹிந்தாராம வீதியைச் சேர்ந்த 23 வயதுடைய கவிந்த கயாஷன், 'டிக்கிரா' ட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தகவல்களின்படி, பாதிக்கப் பட்டவர்பிரபலபாதாளஉலகக் குழுத் தலைவரான குடு அஞ்சுவால் இயக்கப்படும் போதைப்பொருள் வலையமைப்பின் முக்கிய நபராக இருந்தார்என்றும்பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தேர்தல் கூட்டத்திற்கான அழைப்பிதழில் காணப்படும் வசனம்.

உள்ளாட்சித் தேர்தல் பரப்புரை இன்று நள்ளிரவுடன்நிறைவடையும்நிலையில்,தமிழ் அரசுக் கட்சியின் இறுதிப் பெரும் பரப்புரைக் கூட்டம் நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள கிட்டுப் பூங்காவில் இன்று இடம்பெறுகின்றது. அதற்கான அழைப்பிதழிலேயே இந்த வாசகம் காணப்படுகின்றது.

நீண்டகாலத்திற்குப்பின்னர்இப்போதுதான் ஒரு அரசியல் போராட்டக் களத்திற்குள் காலடி எடுத்து வைக்கும் மனநிலைக்கு, பழைய எழுச்சி நிலையை நோக்கிய படிநிலைக்குக் கட்சி திரும்பியிருக்கின்றது. உள்ளாட்சித் தேர்தலுடன் அது மீண்டும் வடிந்து வாடி வதங்கிப் போய்விடாமல் இருந்தால் நல்லதுதான். தேர்தல் முடிந்ததும் பழையபடி உள்கட்சி அரசியலில் மூழ்கித் திளைத்து முத்தெடுக்க முயன்றால் மாகாண சபைத் தேர்தலில் எல்லாம் அரோகராதான். எனவே இந்த எழுச்சிச் சூட்டை மாகாண சபைத் தேர்தல் வரையும் வீரியத்துடன் கொண்டு செய்வதற்கான அரசியல் செயல் திட்டத்தைக் கட்சி தயாரித்துச் செயற்படுத்தவேண்டும்.

.................................

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சுமார் 70,000 வேட்பாளர்கள் போட்டியிட்டாலும், சுமார் 10,000 பேர்கூட தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடவில்லை என்று ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவிக்கிறார். எஞ்சிய 60 ஆயிரம் பேரில் வடக்கு கிழக்கில் நிச்சயம் திசைகாட்டியின் வேட்பாளர்களில் 9-0 வீதம் பேருக்கு இடமிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிச் சூட்டோடு உள்ளாட்சித் தேர்தலும் வந்ததால் அந்த அலையில் வென்றுவிடலாம் என்ற கனவில் திசைகாட்டியின் பின்னால் சென்ற பலருக்கும் இப்போது என்ன செய்வது என்று தெரியவில்லை. எப்படியும் திசைகாட்டியில் வென்றுவிடலாம் என்று கடந்த தேர்தலில் மற்றைய கட்சிகளுக்கு வேட்பாளர்களாகப் பெயர் கொடுத்த பலர்கூட கட்சி தாவி சிவப்புச் சட்டை வேடம் தரித்தார்கள். இதில் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களால் மற்றக் கட்சிகள் ஒதுக்கித் தள்ளியவர்களும் அடக்கம்.

போதாக்குறைக்கு இவர்களை நம்பி சல்லிக்காசுகூடத்தரமுடியாதுஎன்றுதிசைகாட்டி கைவிரித்து விட்டதால் பரப்புரைக்கு என்ன வழி என்று தெரியாது பெரும்பாலான வேட்பாளர்கள் முடங்கிப் போய்விட்டார்கள். தமதுகட்சியால்நிறுத்தப்பட்டவேட்பாளர்களை நம்பி யாரும் வாக்குப் போடப்போவதில்லை. கட்;சித் தலைவர்களை நம்பி அவர்களின் கவர்ச்சிக்காத்தான் வாக்குப் போடுவார்கள் என்று கருதும் திசைகாட்டி தெற்கிலிருந்து தலைவர்களை அழைத்து வந்து போடும் கூட்டங்கள் தவிர, பெரிதாகப் பரப்புரையில் அக்கறை காட்டவும் இல்லை. ஆங்காங்கே முக்கிய சந்திகள், கிராமங்களையொட்டி வளவுகளில் ஒரு சில மேடைகள் போட்டுக் கூட்டம் நடத்திப் பார்த்தார்கள். ஆனால் மக்கள் வருவதாக இல்லை. அதனால் அத்தகைய கூட்டங்களுக்குச் செலவிடுவதும் 'வேஸ்ட்' என்று விட்டுவிட்டார்கள். இந்த நிலையில் காணாமற்போயிருக்கும் 60 ஆயிரம் வேட்பாளர்களில் நிச்சயம் அவர்களுக்கும் கணிசமான இடங்கள் ஒதுக்கலாம்.

ஆளும்தரப்பு, அதிகாரத்தில் இருக்கும் தரப்பு, இப்போதைக்கு அதிகளவில் நிதி வளம் உள்ள தரப்பான திசைக்காட்டியின் நிலமையேஇதுஎன்றால்மற்றையகட்சிகளின் நிலையைச் சொல்லவும் வேண்டுமா? அவர்களில்பெரும்பாலானவர்களும்வீடுகளில் படுத்துக்கிடந்துகொண்டேவெல்லலாம்என்று நினைக்கிறார்கள். கடந்தமுறை உள்ளாட்சித் தேர்தலில்வீடுவீடாகச்சென்றுபரப்புரைசெய்த அளவிற்குக்கூடஇமுறைதமிழ்க்கட்சிகளின் வேட்பாளர்களில் பலரும்கூட வீடுகளுக்குச் சென்றதாக இல்லை. எப்படியும் மக்கள் தமக்கே வாக்களிப்பார்கள் என்ற இவர்களின் அதீத நம்பிக்கையில் மண்விழாமல் இருந்தால் சரிதான். முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஒருவரைச் சந்தித்தேன், "எப்படியும்நாங்கள்தான் எல்லா இடங்களிலும் ஆட்சிக்கு வருவோம். திசைகாட்டிக்கும் சைக்கிளுக்கும் இடங்கள் கிடைத்தாலும்கூட அவர்கள் யாருடனும் சேரப்போவதில்லை. அதனால் தமிழ் அரசுக் கட்சியும் நாங்களும் சேர்ந்து எல்லா இடங்களிலும் ஆட்சியைப் பிடிப்போம், அதில் சந்தேகம் வேண்டாம்'' என்றார் நம்பிக்கையாக. "ஓவர் கொன்பிடன்ட் உடம்புக்கு ஆகாது" என்று சொல்லவேண்டும் என்று நினைத்தேன், ஆனால் அவர் நம்பிக்கையை ஏன் சிதைப்பான் என்று பேசாமலேயே வந்துவிட்டேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மே 28 வரையும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மக்களுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்கிய பின்னர் அவர் இந்த அறிவிப்பை அங்கிருந்தே விடுத்தார்.

இந்தப் போராட்டத்தை தமிழ் அரசுக் கட்சி அறிவித்தாலும் தமிழ்க் கட்சிகள் யாவற்றையும் இணைத்துக்கொண்டு போராட்டத்தை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் முதல் முல்லைத்தீவு வரை 5620 ஏக்கர் காணிகளை அரசுடமையாக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஆளும்தரப்பு மார்ச் 28 வெளியிட்டுள்ளது. அரசுடமையாக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள காணிகளில் பெருமளவானவை தனியாரின் உறுதிக் காணிகள். போர், இடப்பெயர்வு, இராணுவத்தினரின்ஆக்கிரமிப்புஆகியவற்றின் காரணமாக இந்தப் பகுதிகளில் இருந்த மக்கள் நீண்ட காலமாக இடம்பெயர்ந்து உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் நிரந்தரமாக வசித்து வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அரசுடமையாக்கப்படவுள்ள இந்தக் காணிகளில் தமது காணிகளை இன்னும் 3 மாதங்களுக்குள் தனியார் உரிமை கோரினால் அது தொடர்பில் விசாரணை நடத்தி அதன் பின்னர் அந்தக் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

தனியார் தமது காணிகளை உரிமை கோருவதற்கு ஆளும்தரப்பு விதித்துள்ள அதே காலப்பகுதியையே இப்போது இந்த வர்த்தமானியை விலக்கிக்கொள்வதற்காக ஆளும்தரப்புக்கான காலக்கெடுவாக தமிழ் அரசுக் கட்சி விதித்துள்ளது.

''காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானி அறிவித்தலை விடுப்பதற்கு ஆளும்தரப்புக்கு- மே 28 வரை காலக்கெடு-வழங்குகின்றோம். அந்தத் திகதிக்குள் வர்த்தமானியை அரசு கை வாங்காவிட்டால், ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் தமிழ் மக்களை இணைத்துக்கொண்டு அந்த வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக பெரும் சட்ட மறுப்புப் போராட்டம் ஒன்றே முன்னெடுப்போம்'' - என்று சுமந்திரன் தெரிவித்தார்.

''தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்கான போராட்டத்தை மீண்டும் நடத்தவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். தங்கள் நிலங்களைக் காப்பதற்காக மீண்டும் போராட்டங்களில் ஈடுபடவேண்டிய ஒரு தேவை வந்துள்ளது. தமிழினத்தின் கருத்தை இந்தப் போராட்டம் மூலம் முழு உலகக்கும் நாம் முன் வைப்போம்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஊடகங்களுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படும் இந்த கருத்துக்கள் முற்றுமுழுதாக தேர்தல் சட்டத்துக்கு முரணானதாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வருண தீப்த ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

தேர்தல் பரப்புரை மேடைகளில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொய் கூறுவது மாத்திரமின்றி, அச்சுறுத்தல்களையும் விடுக்கின்றார். இவைமாத்திரமின்றிமுன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பழைய கதைகளையும் தேடுகின்றார்.

அதற்கமைய மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் அந்த மாவட்டங்களின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி கூறிய விடயங்கள், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களாகும்.

முன்னாள் ஜனாதிபதி ரணிலின் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது மாத்திரமின்றி, கடந்த காலங்களில் அவர் கூறியவற்றையும் தற்போதைய ஜனாதிபதி மீளக் கூற ஆரம்பித்திருக்கின்றார். தற்போது அநுரகுமார திஸாநாயக்க, அநுர விக்கிரமசிங்கவாகியிருக்கின்றார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமக்கு வாக்களிக்காவிட்டால் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி அச்சுறுத்துகின்றார்.

நாட்டில் பொறுப்புள்ள எந்தவொரு அரசியல்வாதியும் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் திஸ்ஸமகாராம பிரதேச சபையை ஜே.வி.பி. கைப்பற்றியது. ஆனால் ஐக்கிய தேசிய கட்சி ஆளும்தரப்போ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆளும்தரப்போ திஸ்ஸமகாராம பிரதேச சபையை ஜே.வி.பியின் சபையாகக் கருதவில்லை. ஏனைய பிரதேச சபைகளைப் போன்றே அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டது. எனவே தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறாத உள்ளூராட்சிமன்றங்களுக்குநிதிஒதுக்கப்படாது என ஜனாதிபதி குறிப்பிடுவது ஒழுக்கத்துக்கு முரணானதாகும்.

இது தொடர்பில் செய்திகளை வெளியிடும் ஊடகங்களையும் ஜனாதிபதி அச்சுறுத்துகின்றார். ஜனாதிபதியால் தெரிவிக்கப்படும் இந்த கருத்துக்கள் முற்றுமுழுதாக தேர்தல் சட்டத்துக்கு முரணானதாகும் என்றார்.

## பொலிஸ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவர், காவலில் இருக்கும்போது திடீரென சுகவீனமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும்போது உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கொஸ்கொட, ஹதரமன்ஹந்திய பகுதியைச் சேர்ந்த இருபத்தேழு வயதுடைய தரிந்து சிறிவர்தன டி சொய்சா என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மே 1 அன்று போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார். இந்த இளைஞனின் மரணம் குறித்து முறையான விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் கூறுகின்றனர்.

தனது மகன் கைது செய்யப்பட்டபோது கொஸ்கொட காவல்துறை அதிகாரிகள் அவரைக் கடுமையாகத் தாக்கினர் என்றும் மகனின் இறப்புக்கு அதுவே காரணம் என்றும் உயிரிழந்த இளைஞனின் தந்தை நிமல் சிறிவர்தன டி சொய்சா குற்றஞ்சாட்டுகிறார்.

## வாக்காளர்களுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள ஒரு கைவிடப்பட்ட வீட்டில் ஏராளமான பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து, பொலிஸார் அந்த வீட்டில் சோதனை செய்தனர். எனினும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

பொருள்கள் அனைத்தையும் கைப்பற்றிய பொலிஸார், அவற்றை அங்கே பதுக்கி வைத்தவர்களைத் தேடிவலைவிரித்துள்ளனர்.

## இன்றிரவு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான இராஜதந்திர உறவுகளின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரு தரப்பு உறவுகளையும் மேலும் பலப்படுத்தும் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி அனுர திசாநாயக்க தனது பயணத்தில் வியட்நாம் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு நடத்துவார். மேலும், அந்த நாட்டை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் குழுவையும் சந்திக்கவுள்ளார்.

மே 6 வியட்நாமின் ஹோ சி மின் நகரில் தொடங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தின கொண்டாட்டங்களிலும் தலைமை விருந்தினராகக் கலந்துகொள்கிறார் ஜனாதிபதி, முக்கிய உரையையும் ஆற்றுவார்.

இந்த அரசு முறைப் பயணத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் மூத்த அரசு அதிகாரிகள் குழுவும் செல்கின்றனர்.

## தீயில் கலந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண அவைத்தலைவருமான சிவஞானம், அமைச்சர் சந்திரசேகரன், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணப் படை அதிகாரிகள், பொதுமக்கள் என்று பலரும் திரண்டு வந்து அவருக்குத் தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டு திருவுடல் பூந்தண்டிகையில் ஊர்வலமாக செம்மணி இந்து மயானத்திற்குக் காவிச் செல்லப்பட்டது. அங்கு அவரது உடல் தீயில் கலந்து ஜோதியானது. தான் மறைந்தால் தன்னை சமாதி வைக்காது செம்மணி மயானத்தில் தகனம் செய்யும்படி அவர் ஏற்கனவே கேட்டுக்கொண்டிருந்தமையால், அவரது விருப்பப்படியே அவரது உடல் செம்மணியில் தீயுடன் கலந்தது.

நல்லை ஆதீனத்தின் குரு முதல்வராக செயற்பட்ட சுவாமிகள் போர்க் காலத்திலும் சைவத்தையும் தமிழையும் காப்பதற்கு அரும் பெரும் சேவைகள் செய்தார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் பூரணமடைந்த செய்தி சைவமக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளதாக சைவசமய அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

## பாக். தூதரகம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு அந்தப் பகுதியில் பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்தனர்.

பஹல்காம் தாக்குதலைக் கண்டித்து புதன் கிழமையன்றும் பாகிஸ்தான் தூதரகத்திற்கு முன்பாகப் போராட்டம் இடம்பெற்றது.

## 23 சதுர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வாதாரம் மற்றும் அமைதியான எதிர்காலத்திற்கான வாக்குறுதியை மீட்டெடுப்பது பற்றியதும் ஆகும்.

பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுவது, பிள்ளைகள் பாதுகாப்பாக விளையாடுவது, விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு அச்சமின்றித் திரும்புவது, மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மீண்டும் கட்டியெழுப்புவது போன்ற விடயங்களுக்கு கண்ணிவெடிகளை அகற்றுவது மிகவும் முக்கியம்.

ஆளும்தரப்பின் அபிவிருத்தி தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப, அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்வி, சுகாதாரம், தகவல் முகாமைத்துவம், சமூக நலன்பேணல் மற்றும் சுற்றாடல் நிலைத்தன்மைக்காக இந்த செயன்முறையை விரைவுபடுத்துவது மிகவும் முக்கியம்.

இதற்கு முன்னர் அபிவிருத்தி நடவடிக்கைகள் மனித நடவடிக்கைகளில் இருந்து விலக்கப்பட்டிருந்த இந்தப் பகுதிகள் செழிப்படையவும், எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்கவும், விவசாயத்தையும் சுதேச பொருளாதாரத்தையும் மேம்படுத்தவும், சூழல் நிலைத்தன்மையை உருவாக்கவும் கண்ணிவெடிகள் அகற்றல் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

வடக்கு மற்றும் கிழக்கில் சுமார் 23 சதுர கிலோமீட்டர் நிலம் இன்னும் கண்ணிவெடிகள் காரணமாக பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, கண்ணிவெடிகள் உள்ள பகுதிகளை பொதுமக்கள் விரைவில் பயன்படுத்தக்கூடியதாக மாற்ற வேண்டும். 2028 ஜூன் 1ஆந் திகதிக்கு முன்னர் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான ஒப்பந்தத்தின் பிரிவு 5 இன் கீழ் உள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் உள்ளது.

ஒவ்வொரு கண்ணிவெடியையும் அகற்றுவது மக்களின் நன்மைக்கும் நாட்டின் எதிர்காலத்திற்கும் மிகவும் முக்கியமானது என்றும், எனவே, சர்வதேச சமூகத்திடமிருந்து தொடர்ந்து ஆதரவை எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

இந்த நிகழ்வில், தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுமையத்தின் (ஹினிபுளீ) இணையத்தளம் திறந்துவைக்கப்பட்டது. வட மாகாணத்தில் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட சித்திரக் கண்காட்சியின் வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன,

# வவுனியா பொலிஸ் நிலையம் இடமாற்றப்பட்டு அங்கு வியாபாரத் தொகுதி அமைக்கப்படும்

## சுயேச்சை வேட்பாளர் கிரிதரன் தெரிவிப்பு

வவுனியா நகரசபைக்குட்பட்ட காணியில் அமைந்துள்ள தலைமை பொலிஸ் நிலையத்தை அகற்றி அந்த இடத்தில் நவீன வியாபாரத் தொகுதி ஒன்று அமைக்கப்படும் என வவுனியா மாநகர சபையில் கோடாலிச் சின்னத்தில் போட்டியிடும் சுயேட்சைகுழு வேட்பாளர் சி.கிரிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவித்த போது -

இந்த தேர்தலில் பலகட்சிகள் போட்டியிடுகின்றன. அனைவரும் கூறுகின்றனர் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் வீதியை புனரமைப்போம். வடிகால் அமைப்போம், கழிவகற்றுவோம் என்று. இவையெல்லாம் அந்தந்த சபைகளின் கடமைகள். சபை இருந்தாலும் இல்லாவிடிலும் அது நடந்து கொண்டே இருக்கும். அவற்றை மேம்படுத்த வேண்டும்.

அதனை விட மக்களின் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. தேவைகள் இருக்கின்றன. நாங்கள் ஆட்சியமைத்தால் இந்த விடயங்களை மேலும் வலுப்படுத்துவதுடன், மக்களின் தீர்க்க முடியாத பிரச்சினைகளை அடையாளம் கண்டு இலகுவாக்கி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன், வவுனியா நகரப்பகுதி இன்று முக்கிய வியாபாரமையமாக மாறிக்கொண்டு வருகின்றது. அதனால் நகரில் ஒரு நெருக்கடி நிலையும் ஏற்படுகின்றது. ஆனால் நகரசபைக்குட்பட்ட காணியில் வவுனியா தலைமை பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது.

நாங்கள் ஆட்சியமைத்தால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொலிஸ் தலைமையகத்துடன் கலந்துரையாடி பொலிஸ் நிலையத்தை அந்த இடத்தில் இருந்து மாற்ற நடவடிக்கை எடுப்போம்.

அங்கு நவீன வியாபாரத் தொகுதி ஒன்றை அமைத்து ஒரு வாகனத் தரிப்பிடத்தையும் அமைப்பதற்கான முயற்சிகளை எடுப்போம்.

எனவே, ஆட்சி அதிகாரம் எமக்கு கிடைத்தால் இந்த திட்டங்களை செயற்படுத்துவோம். - என்றார். 100

# அம்புலன்ஸ் வசதி இன்மையால் வரணியில் 4 உயிர்கள் காவு

## வேட்பாளர் ஞானநிரோஷன் சுட்டிக்காட்டு

(சுபேசன்)



தென்மராட்சி - வரணி பிரதேசவைத்தியசாலையில் நோயாளர் காவு வண்டி இன்மையால் அண்மையில் வரணிப் பகுதியைச் சேர்ந்த நான்கு உயிர்கள் அநியாயமாக பறிபோயுள்ளன என தேசிய மக்கள் சக்தியின் சாவகச்சேரிப் பிரதேசசபை வேட்பாளர் பா.ஞானநிரோஷன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் வரணி மாசேரிக் கிராமத்தில் இடம்பெற்ற பிரசார நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

தேசியம் கதைக்கும் களம் உள்ளூராட்சிசபைகள் அல்ல. இது மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான களம். சாவகச்சேரிப் பிரதேசசபைக்கு உட்பட்ட சந்தைகள் உரிய விதத்தில் இயங்குவதில்லை. மயானங்கள் பாலைவனங்களாக உள்ளன. மயானங்களுக்குச் செல்லும் வீதிகள் பெரும் குன்றும் குழியுமாக உள்ளன.

மாரி காலத்தில் உடல்களை தகனம் செய்ய வரணிப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் சாரதியின் தவறால் வரணி வைத்தியசாலையின் நோயாளர்காவு வண்டி விபத்துக்குள்ளானது.

இதனால் இன்றுவரை வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி இல்லை. இதனால் உரிய நேரத்தில் மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்க முடியாத நிலை காணப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்குள் வரணிப் பகுதியைச் சேர்ந்த நான்கு உயிர்கள் அநியாயமாக பறிபோயுள்ளன. என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமை தகுதியான வேட்பாளர்களையே நிறுத்தியுள்ளது

## வேட்பாளர் றியா மசூர் தெரிவிப்பு

(றிபாஸ்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அல் முனீரா வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர் றியா மசூரை ஆதரித்து மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

கட்சியின் பிரமுகர் ஸஹீல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் உதுமாலெப்பை, கட்சியின் பிரதித் தலைவரும் சட்டத்தரணியுமான எஸ்.எம்.ஏ கபூர், தொழிலதிபர் ஏ.கே அமீர் உட்பட உயர் பீட உறுப்பினர்கள், மாவட்ட குழு தலைவர்கள், மத்திய குழு உறுப்பினர்கள், மற்றும் ஆதரவாளர்கள், என பலரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டோர் மத்தியில் வேட்பாளர் றியா மசூர் கருத்து தெரிவிக்கையில் -



இத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக மரச் சின்னத்தில் போட்டியிடுகின்ற சகல வேட்பாளர்களும் மக்களை சிறந்த முறையில் வழிநடத்தி சகல இன மக்களுக்கும் பாகுபாடுயின்றி அபிவிருத்திகளையும், வாழ்வாதாரத் திட்டங்களையும், முன்னெடுத்துச்செல்கின்ற தகுதியான, திறமையுள்ள வேட்பாளர்களை அடையாளம் கண்டு கட்சியின் தலைமையும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நிறுத்தியுள்ளார்.

ஆகவே வாக்காளர்களாகிய நீங்கள் நேராக காலத்தோடு சென்று மரச் சின்னத்துக்கு வாக்களித்து அதிகமான உறுப்பினர்களை பெற்று அட்டாளைச்சேனை பிரதேச சபையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.





# மு.கா செயலாளர் நிசாம் காரியப்பருடன் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் சந்திப்பு

## பயங்கரவாத தடுப்பு சட்டம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து எடுத்துரைப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரை வியாழக்கிழமை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.


இதன்போது அவர் பல விடயங்களை ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளும் கட்டத்தில், குறிப்பாக அமெரிக்காவின் எதிர்பாராத உயர்வு வரி விதிப்புகளின் மத்தியில், ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை இலங்கைக்கு வழங்கப்படுவது மிக அவசியமானது என்பதை எமது கட்சி முழுமையாக ஏற்றுக் கொள்கிறது.

இருப்பினும் ஸ்ரீலங்கா அரசாங்கம் சில விடயங்களில் நடந்து கொள்ளும் விதம் கவலைக்குரியதாக உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத் தடுப்பு சட்டம் இரத்து செய்யப்பட்டு, சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைத் தரநிலைகளுடன் முழுமையாக ஒத்துச் செல்லும் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

புதிய சட்டம் அமுலுக்கு வரும் வரை, பயங்கரவாதத் தடுப்பு சட்டம் பயன்படுத்தப்படக் கூடாது., ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு மாத்திரம் ஒரு விதிவிலக்கு இருக்கலாம்.



பயங்கரவாதத் தடுப்பு சட்டமானது கருத்து சுதந்திரத்தை அடக்குவதற்காகப் பயன்படுத்துவதை கடுமையாகக் கண்டிக்கிறோம். உதாரணமாக, பாலஸ்தீனத்தில் இஸ்ரேலின் கொடுமைகளை எதிர்த்து ஸ்டிக்கர் ஒட்டியதற்காக பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை பயன்படுத்தி முஸ்லிம் இளைஞனை கைது செய்து, தடுத்து வைத்ததை ஏற்க முடியாது. அதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். இதற்காக உரிய இளைஞனிடம் அரசாங்கம் மன்னிப்புக் கோர வேண்டும்.

அத்துடன் மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். அதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகள் உடனடியாக செய்யப்பட வேண்டும்.

நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு ஏற்ப அங்கு கட்சி தலைமைக்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்தக் கட்சியின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் உண்மையாகவே எந்தக் கட்சியை சேர்ந்தவர்களோ அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற குழுவின் தலைவராக சபாநாயகர் ஏற்க மறுப்பதை சுட்டிக்காட்டிய செயலாளர் நிசாம் காரியப்பர், இது விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதியை நிராகரிக்கும் அமைதியின் நிழல்

உலக பத்திரிகைச் சுதந்திர தினமான இன்று, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ஊடக சுதந்திரம் எப்படியொரு பயங்கரவாத நிழலில் எத்தனை வருடங்களாக வாழ்ந்து வருகிறதென்ற வேதனை உறைக்கின்றது. அது பற்றிச் சிந்திக்கத் துணிந்தாலே, நம்மைத் தனிமைப்படுத்தும் நியாயமான கேள்விகள் எழுகின்றன. பத்திரிகையோ, சுய சிந்தனையின் ஒலியோ, இந்த நிலத்தில் எப்போதுமே பாதுகாப்பாக இல்லை என்பதே கடந்த கால வரலாற்றின் துடிப்பான உண்மை.

1990–களின் காலம் தொடங்கி, வன்முறை, பயம், தமக்குத் தாங்களாகவே தண்டனைகள் பிறப்பித்து மக்களை மிரட்டும் இயந்திரங்கள் ஊடகங்களை அடக்கி ஒடுக்குவதை மையமாகக் கொண்டு பயணித்தன. இந்தப் பயணத்தில் பத்திரிகையாளர்கள் பலர் கொல்லப்பட்டனர். பத்திரிகைப்பணியாளர்கள்பலரும்கூடக் கொல்லப்பட்டனர். நிமலராஜன், சிவராம், சுகிர்தராஜன், லசந்த விக்கிரமதுங்க என்று எண்ணிறைந்த பத்திரிகையாளர்களும் பணியாளர்களும் திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களின் உயிர் வாங்கப்பட்டதற்குப் பின்னாலும், அவர்களின் குரல் இன்னும் நம்மை விசாரிக்கிறது – ”என்னை ஏன் கொன்றாய்?”, “என் கொலையாளி யார்?”, “உண்மையை எழுதியது எனது குற்றமா?” என அவர்களின் குரல் காற்றில் ஒலித்தவண்ணமே இருக்கிறது. ஆனால், இக்கேள்விகளுக்கு பதிலளிக்க யாரும் முன்வரவில்லை. நீதி மண்டபங்களின் கதவுகள் திறக்கப்பட்டதில்லை. ஆளும் தரப்புக்களும் சட்டஅமைப்புகளும் மாற்றமடைந்தும், பத்திரிகைச் சுதந்திரம் ஏளனமாக உருக்கப்பட்டதே தவிர, உரிமையாக அங்கீகரிக்கப்படவில்லை. ஆட்சியாளர்கள்அதிகாரத்தைக் கைப்பற்றும் வரையும் பத்திரிகையாளர்களுக்கு நண்பர்களாகவும் ஆட்சியைப் பிடித்ததும் எதிர்களாகவும் இருக்கிறார்கள்.

இன்று, வடக்கிலும் கிழக்கிலும் உள்ள ஊடகவியலாளர்கள் முன்னெச்சரிக்கையோடு வாழ்வதும், தனிப்பட்ட பாதுகாப்பு வேண்டுமா என்ற சந்தேகத்தோடு பணியாற்றுவதும் வழக்கமான நிலையாகிவிட்டது. பத்திரிகை என்பது ஜனநாயகத்தின் நான்காவது தூணென்று சொன்னாலும், சில மண்டபங்களில் அது சிதறடிக்கப்படும் தூணாகவே பார்க்கப்படுகிறது.

இந்தச் சூழலில், உலக பத்திரிகைச் சுதந்திர தினம், நம்மை புகழ் விளக்குகள் ஏந்தி கொண்டாடுவதற்கான நாளாக அல்ல, மாறாக, நம்மால் இழந்தவர்களை நினைத்து நியாயத்திற்காக முழங்கும் நாளாகவே இருக்கவேண்டும்.

இன்றுபத்திரிகைச்சுதந்திரத்தைப்பேணவிரும்பினால், முதலில் அந்த சுதந்திரம் உயிருடன் இருக்கவேண்டும் என்று நினைத்தவர்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கே நியாயம் வழங்கப்பட வேண்டியுள்ளது. இல்லையெனில், சுதந்திரம் என்பது வார்த்தை மட்டுமே; உண்மை அல்ல. நாம் மறக்கவில்லை. நீதியைக் கோருகிறோம்.

# அமீர் அலி வித்தியாலயத்தில் புதிய அதிபர் பொறுப்பேற்பு

(பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட மீராவோடை அமீர் அலி வித்தியாலயத்திற்கு பதில் அதிபராக மௌலவி எம்.எச்.முபாரக் சிறாஜி தனது கடமையினை புதன்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

குறித்த பாடசாலையில் அதிபராக கடமை புரிந்த எம்.பி.மஹ்ரூப் ஓய்வு பெற்றுச் சென்றமைக்காக பாடசாலை பதில் அதிபராக எம்.எச்.முபாரக் சிறாஜி கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏஎம்.எம் தாஹிர் முன்னிலையில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.



# வன்முறைகளற்ற தேர்தலுக்கான கலாசாரத்தை உருவாக்கவேண்டும்

## கஃபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவிப்பு

(ஹஸ்பர்)

அமைதியான தேர்தலுக்கான விழிப்புணர்வு நிகழ்வொன்று கிண்ணியா விசன் மண்டபத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம் பெற்றது.




குறித்த நிகழ்வை நீதியானதும் சுதந்திரமானதுமான மக்களுக்கான தேர்தலுக்கான இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது.

தேர்தல் காலங்களில் ஏற்படும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டிய முறை தொடர்பிலும் தெளிவூட்டப்பட்டன.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலை முன்னிட்டு குறித்த நிகழ்வு இடம் பெற்றிருந்தது. இதன் போது வளவாளராக தகவல் அறியும் உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி ஜகத் லியானராச்சி கலந்து சிறப்பித்தார்.

இதில் மாவட்ட இணைப்பாளர் ராபில், சமூக பெண் சிவில் செயற்பாட்டாளர்கள், பெண் வேட்பாளர்கள், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



இதன்போது அமைதியான தேர்தலுக்கான எனும் பதாகையிலும் கலந்து கொண்டவர்கள் கையொப்பமிட்டனர். இதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கெபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீன் -

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுதாக்கல் செய்ததில் இருந்து கெபே அமைப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. அந்த அடிப்படையில் தேர்தலுக்கான முன்னர் பின்னர் தேர்தல் அன்று என மூன்று தினங்களில் குறிப்பாக கண்காணிப்பு இடம் பெறுகின்றது.

மாவட்ட மட்டத்தில் 26 இணைப்பாளர்களும் தேசிய மட்டத்தில் 105 கண்காணிப்பாளர்களும் தேர்தலுக்கான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த தேர்தலுக்கு முன் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகின்ற போது அதிகமான முன்னேற்றம் கண்டுள்ளது. வன்முறையற்ற தேர்தல் கலாசாரம் குறைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

2011, 2018 உள்ளூராட்சி மன்ற தேர்தலை விடவும் வன்முறைசம்பவங்கள் குறைந்தளவில் பதிவாகியுள்ளது. எனவே தான் சமாதானமான சுமூகமான தேர்தலை நடாத்த இந்த காலப் பகுதியில் அரசியல் கட்சிகள்,சுயேட்சை குழுக்களின் அபேட்சகர்கள் ஒத்துழைக்கவும் எனவும் வன்முறையற்ற தேர்தலில் ஒத்துழைக்க வேண்டும் எனவும் மேலும் கெபே அமைப்பு வேண்டிக் கொள்கின்றது. - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# அட்டாளைச்சேனை கடற்கரை சிறுவர் பூங்கா அரைக் கோடி ரூபா செலவில் மறுசீரமைப்பு

(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்கள் ரி- 100 திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்களைஅம்பாறைமாவட்டம் முழுவதும் முன்னெடுத்து வருகிறார். அதன் ஓர் அங்கமாக பொத்துவில் தேர்தல் தொகுதியின் அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் நன்மை கருதி பொதுமக்கள்





ஓய்வை கழிக்கும் விதமாகவும் சிறுவர்களின் நன்மை கருதியும் தனது டீ- 100 திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை கடற்கரை சிறுவர் பூங்காவை மறுசீரமைக்க சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களின் டீ- 100 திட்டத்தின் கீழ் சுமார் 50 லட்சம் ரூபாய் செலவில் ஒளியூட்டப்பட்டு, சிறுவர் விளையாட்டுஉபகரணங்களுடன்புதியவடிவில்சீரமைக்கப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தை முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டதுடன் மேலும் இந்த அட்டாளைச்சேனை கடற்கரை சிறுவர் பூங்காவில் முன்னெடுக்க வேண்டிய மேலதிக அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இந்த விஜயத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களின் ஆலோசகர் எம்.ஜே.எம். அன்வர் நௌஸாத், வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல். நூருல் ஹுதா உட்பட முன்னாள் எம்.பி ஹரீஸ் அவர்களின் இணைப்பாளர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.







# முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சந்தை நிகழ்வு

தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள பரிலூகா சிறுவர் முன்பள்ளியில் வெள்ளிக்கிழமை சிறுவர்களுக்கான வியாபாரம் கற்றல் என்பது தொடர்பாக அறிவூட்டும் வகையில் சிறுவர் சந்தை நடத்தப்பட்டது.





இதன் போது அதிகளவானவர்கள் கலந்து கொண்டு தமக்கு தேவையான பொருள்களைக் கொள்ளளவு செய்தனர்.

113





வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# தேசிய மக்கள் சக்தி இந்தத் தேர்தலில் பெரும் பின்னடைவுகளைச் சந்திக்கும்

## றிசாத் எம்.பி. தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தி இந்த தேர்தலில் பாரிய பின்னடைவைச் சந்திக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா, சூடுவெந்தபுலவு கிராமத்தில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த இரு தசாப்தங்களாக தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு இந்தப் பகுதியில் ஆற்றிய பணிகளுக்கு நன்றிக் கடன் தெரிவிக்கும் தேர்தலாக இந்த தேர்தலைப் பார்ப்பார்கள். தேசிய மக்கள் சக்தி மக்களை ஏமாற்றுகிறார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அதிகளவிலான வாக்குகளை வழங்கினார்கள். அதேபோல் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கு பகுதி மக்களும், தென்பகுதி மக்களும் அதிக வாக்குகளை வழங்கினார்கள்.

ஆனால், கடந்த 6 மாத காலப்பகுதியில் அவர்களது செயற்பாடுகள் சொன்னதிற்கு நேர்மாறாக இருக்கிறது. இந்த தேர்தலில் பெரிய பின்னடைவை அவர்கள் அடைவார்கள்.









எமது கட்சி நாடாளுமன்றத் தேர்தலை விட இம்முறை அதிக வாக்குகளைப் பெறுவோம். கடந்த முறை வன்னியில் நான்கு சபைகளை கைபற்றி ஆட்சி அமைத்தோம். இம்முறை அதிக சபைகளை கைப்பற்றுவோம் என்ற நமபிக்கை இருக்கிறது எனத் தெரிவித்தார். 100

# புனித ஹஜ் யாத்திரைக்கு வழியனுப்பி வைத்தல்

(சர்ஜூன் லாபீர்)

இஸ்லாத்தில் ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையாகிய புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக புனிதமான மக்கமா நகர் செல்ல இருக்கும் சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களை வழியனுப்பும் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனிபா தலைமையில் நேற்று(வெள்ளிக்கிழமை) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கணக்காளர் எஸ்.எல். சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமீல், மேலதிக மாவட்ட பதிவாளர், ஏ.கே.றினோஸா, பிரதம முகாமைத்துவ சேவை உதவியாளர்கள், நிதி உதவியாளர், காரியாலயம் உத்தியோகத்தர்கள் மற்றும் ஹஜ் பிரயாணம் செல்லும் உத்தியோகத்தர்களின் துணைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் இஸ்லாமிய மார்க்க சொற்பொழிவை அபிவிருத்தி உத்தியோகத்தர் மௌலவி ஐ.எல்.எம் றிபாஸ்(ஹக்கானி) அவர்களினால் நடத்தப்பட்டது.





அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எப்.சிபானா( கணக்கு பிரிவு), முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.டி.நிஸாமா(பதிவாளர் பிரிவு), மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.பி நஸ்லா(சமூக சேவை பிரிவு) ஆகிய உத்தியோகத்தர்கள் இம் முறை புனித ஹஜ் யாத்திரை மேற்கொள்பவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கனமழையால் வெள்ளத்தில் மூழ்கிய வயல் நிலங்கள்

## திருமலையில் விவசாயிகளுக்குச் சவால்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம், கிண்ணியா பிரதேச செயலகப் பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் புதன்கிழமை பெய்த கனமழையால் நீரில் மூழ்கியுள்ளன.

தம்பலகாமம் கோயிலடி பகுதியை அண்டிய வயல் நிலங்களும் கிண்ணியா சூரங்கல் பகுதியை அண்டிய பல ஏக்கர் வயல் நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன. தற்போது நிலத்தை பதப்படுத்தி நெற் செய்கைக்காக விதைத்து ஓரிரு நாள்களின் பின்பே கனமழை காரணமாக நீரால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது இதனால் மீண்டும் விதைக்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் கந்தளாய் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும் நெற்





செய்கை நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# வடக்கு மாகாண மட்ட ஊராட்சி முற்ற கலந்தாய்வு கைதடியில் இடம்பெற்றது

(சுபேசன்)

கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற ஊராட்சி முற்ற கலந்துரையாடல்களின் மாகாண மட்ட கலந்துரையாடல் புதன்கிழமை கைதடியில் அமைந்துள்ள பிரதம செயலாளர் செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், கிறிசலிஸ் நிறுவன திட்ட மற்றும் பிராந்திய முகாமையாளர் ம.பிரபாகரன், திணைக்கள தலைவர்கள் குடிசார் அமைப்புகளின் சம்மேளன பிரதிநிதிகள், சமூகத்தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் இணையவழியில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த அரசாங்க அதிபர்கள், மேலதிக அரசாங்க அதிபர்கள் ஆகியோரும்





பங்கெடுத்திருந்தனர்.

மேற்படி கலந்துரையாடலில் மாவட்ட மட்ட ஊராட்சி முற்ற கலந்துரையாடல்களில் தீர்க்கப்படாத வைத்தியத்துறை சார்ந்த பிரச்சினைகள், கல்வித்துறை சார்ந்த பிரச்சினைகள் மற்றும் பால்நிலை வன்முறை சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நல்லை ஆதீனத்தின் மறைவு இந்துமதத்திற்குப் பேரிழப்பு

## சர்வதேச இந்து மத பீடம் அனுதாபம்



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் மறைவு பெரும் துயரம் என சர்வதேச இந்துமத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார் .

மிகுந்த சாதுவானவர், தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அவ்வப்போது தன்னால் இயன்ற அளவு குரல் கொடுத்தவர். இந்து மதத்திற்கு ஒரு பெருமை வாய்ந்த ஆன்மீக தலைவராக செய்யற்பட்டவர் . நாவலர் 200 ஆவது நூற்றாண்டை கொண்டாடுவதற்கு முன்னாள் பிரதமரும் புத்த சாசன மத மற்றும் கலாசார அமைச்சராக இருந்த மகிந்த ராஜபக்க்ஷ, தலைமையில் அலரி மாளிகையில் நாவலர் 200 ஆவது நூற்றாண்டை பிரகடானப்படுத்திய போது தலைமை வகித்தவர்.

அத்துடன் திருவாவடுதுறை ஆதீனம் நல்லூருக்கு விஜயம் செய்த போது இவரதுதலைமையில் அவருக்குசிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டிருந்தது.

நல்லூர் முருகன் ஆலய தேர் திருவிழா உற்சவத்தை நல்லை ஆதீனமும் அவர்களுடன் நான் பங்குபற்றியிருந்த நினைவுகளும் என் மனதில் இன்றும் நிலைத்துள்ளது.

அத்தகைய நல்லதொரு ஆன்மீக தலைவரை இழந்தது இந்து மத மக்கள் வேதனைக்கு உள்ளாகியுள்ளது. அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய சிதம்பரம் தில்லை வாழ் சிவ நடராஜ பெருமானை மனதார பிரார்த்தனை செய்து அவரது ஆன்மா ஈடேற்றத்திற்கு அனைவரும் பிராத்திப்போம்.

# நல்லை ஆதீனக் குருமுதல்வரின் மறைவு முழு நாட்டுக்கும் இழப்பு

## அமைச்சர் சந்திரசேகரன் இரங்கல்

இன நல்லிணக்கத்துக்காக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆற்றிய ஆன்மீக சேவை அளப்பரியது. அவரின் மறைவு முழு நாட்டுக்கும் இழப்பாகும் - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அனுதாப செய்தியில் -

நல்லை ஆதீன குரு முதல்வர் இறையடி சேர்ந்துவிட்டார் என்ற செய்தி வேதனையளிக்கின்றது.

ஆன்மீக பணியென்பது புனிதமானது. அப்பணியை மிகவும் சிறப்பாக முன்னெடுத்தவர்தான் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள். ஆன்மீக சேவைக்கு அவர் ஒருபோதும் மாசு ஏற்படுத்தவில்லை. அதன் புனிதத்தன்மையை கடைசிவரை காத்தார்.

நெருக்கடியான நேரங்களில் எல்லா நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக் காகவும் ஆசி வேண்டி பூஜைகளை நடத்தியுள்ளார். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையிலும் மக்களுக் காக பல சேவைகளை புரிந்துள்ளார். இப்படியான மகான்களின் மறைவு தாங்கிக்கொள்ள முடியாதஒன்றாகும்.

பூரணமடைந்த சுவாமிகளின் ஆத்மா இறையடி சேர இறைவனை பிரார்த்திக்கின்றேன். - என்றுள்ளது.

# நல்லை ஆதீனத்தின் மறைவை முன்னிட்டு துக்கதினம் ஒன்றினை அறிவிக்கவேண்டும்

## ஜனாதிபதிக்கு இந்து மத பீடம் வேண்டுகோள்

இலங்கையின் இந்து மத ஆன்மீக தலைவராக மறைந்த ஆதீன குரு முதல்வரின் மறைவை முன்னிட்டு குறிப்பாக யாழ் வடபகுதியில் ஒரு நாளினை துக்க தினமாக அனுஷ்டிக்க இலங்கை அரசு ஆவண செய்ய வேண்டும் என சர்வதேச இந்த மத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா இந்து மக்கள் சார்பாக வேண்டுகோளை விடுத்துள்ளார் .

இவர் வடக்கு பகுதியில் இக்கட்டான சூழ்நிலையிலும் தனது ஆன்மீக செயல்பாடுகளை தமிழ் மக்களின் மத்தியில் முன்னெடுத்து வந்தவர்.

அதேவேளை தமிழ் மக்களின் இன்னல்களையும் அவ்வப்போது அரசுக்கு தெளிவு படுத்தியவர். இத்தகைய பெரும் ஆன்மீகத் தலைவருக்கு துக்க தினம் ஒன்றை அரசு அறிவிப்பதன் மூலம் இலங்கை வாழ் அனைத்து இந்து மக்களுக்கும் இது ஒரு கௌரவமாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது என பாபு சர்மா தெரிவித்துள்ளார் .




# இந்து சமயத்துக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றியவர் நல்லை ஆதீனம்

## வட மாகாண ஆளுநர் இரங்கல்



இந்து சமயத்துக்காக பல தசாப்தங்களாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இறைவனடி சேர்ந்தமை குறித்து வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் இரங்கல் செய்தி தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் குறிப்பிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது

இந்து சமயத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த அவரை மிக நீண்டகாலமாக நான் அறிவேன். நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனம் ஊடாக இந்து சமயத்தை வளர்ப்பதற்காக பல நிகழ்வுகளை நடத்தி வந்திருக்கின்றார்.

அவற்றுக்கு மேலாக சிறுவர்களிடத்தே இந்து சமயத்தின் மீதான ஈர்ப்பை அதிகரிக்கவும், இந்து சமய அறநெறிகளைப் போதிக்கவும் பல விடயங்களை அவர் முன்னெடுத்திருந்தார் என்பது மிக முக்கியமானது.



இதற்கும் மேலதிகமாக, போர்க்காலத்திலும் சரி அதற்குப் பின்னரான காலங்களிலும் சரி, யாழ்ப்பாணத்தை நோக்கி வருகின்ற இராஜதந்திரிகள், அரசியல்வாதிகள் என்று அவரைச் சந்திக்காமல் எவரும் செல்வதில்லை.

எமது மக்களின் உண்மை நிலையை எடுத்துக்கூறுவதற்கு அவர் என்றும் பின்நின்றவரல்லர். சமயத் தலைவராக இருந்தபோதும் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்காகவும் குரல் கொடுத்துவந்த ஒருவர். அவர் ஆற்றிய பணிகளுக்காக என்றும் எம் மக்களால் நினைவுகூரப்படுவார்.

அவருக்கு வடக்கு மாகாண மக்கள் சார்பாக ஆத்ம வணக்கங்களை தெரிவித்துக்கொள்கின்றேன் என மேலும் தெரிவித்துள்ளார்.

# அக்கரைப்பற்று விளையாட்டு மைதானத்திற்கு மின்னொளி

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அக்கரைப்பற்று விளையாட்டு மைதானத்திற்கு மின்னொளியூட்டும் வேலைத்திட்டம் அக்கரைப்பற்று மாநகர சபையால் முன்னெடுக்கப்படுகிறது.

இரவு வேளையில் இருள் சூழ்ந்து காணப்படும் இந்த மைதானத்தில் போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன என விளையாட்டுக் கழகங்களும் பொது மக்களும் மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்ததுடன் இம்மைதானத்திற்கு மின்விளக்குகள் பொருத்தி, ஒளியூட்டுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.





இதையடுத்து ஆணையாளர் மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக மாநகர சபையின் சொந்த நிதியின் மூலம் மின்னொளியூட்டும் வேலைத் திட்டம் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அங்கு புதிதாக மின் கம்பங்கள் நிறுவப்பட்டு, போகஸ் ரக பிரகாச மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த மைதானம் மின்னொளியூட்டப்படுதால் அங்கு இடம்பெறுவதாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் தடுக்கப்படுவதுடன் இரவு நேரங்களில் இப்பகுதி விளையாட்டு வீரர்களுக்கு மைதானத்தில் விளையாடும் வாய்ப்பும் கிடைக்கிறது.

தமது வேண்டுகோளையேற்று இத்துரித நடவடிக்கையை மேற்கொண்டமைக்காக விளையாட்டுக் கழகங்களும் பொது மக்களும் அக்கரைப்பற்று மாநகர சபைக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

## புலிகளிடமிருந்து பெறப்பட்ட தங்கம், வெள்ளி பதில் பொலிஸ் மா அதிபரிடம் கையளிப்பு

போர் நிலவிய காலப்பகுதியில் விடுதலைப் புலிகளிடம் இருந்து இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட பொதுமக்களின் தங்கம் மற்றும் வெள்ளி பதில் பொலிஸ் மாஅதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

பத்தரமுல்லை இராணுவ தலைமையகத்தில் இதற்கான நிகழ்வு நடைபெற்றது.

பதில்பொலிஸ்மாஅதிபரால்பொறுப்பேற்கப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளி என்பனவற்றின் பெறுமதி நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், இரத்தினக்கல் மற்றும் தங்கஆபரணஅதிகாரசபையூடாகமதிப்பிடப்பட்டதன் பின்னர், அவற்றை இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை அடையாளப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படும்பொருள்களைபொதுமக்களிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக இராணுவம் தெரிவித்துள்ளது.



## க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்:

# மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளி வளாகத்தில் பெரும் சிரமதான நிகழ்வு

(ஸாகிர்)

க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தோட்ட வளாகத்தில் மாபெரும் சிரமதான நிகழ்வொன்றை இன்று (சனிக்கிழமை) காலை 06.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில், அதன் தலைவர் டாக்டர் எம்.எச். சனூஸ் காரியப்பர் தலைமையில், தோட்டப் பராமரிப்புக் குழுத் தலைவரும் உதவிச் செயலாளருமான எஸார் மீராசாஹிப் ஒருங்கிணைப்பில் இடம்பெறவுள்ள இம்மாபெரும் சிரமதான நிகழ்வில், சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகள் மற்றும் சங்கங்களின் அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது ஒத்துழைப்பை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், நம்பிக்கையாளர் சபையின் செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.முஹம்மட் முனாஸ், பொருளாளர் தொழிலதிபர் ஏ.எல்.எம்.முஸ்தபா, பிரதித் தலைவர் தொழிலதிபர் எம்.எம்.எம். முபாரக், உதவித் தலைவர் மௌலவி எம்.எம்.எம்.சலீம் (ஷர்க்கி), உதவிச் செயலாளர் ஏ. பர்ஹாம், உதவிப் பொருளாளர் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் எம். நஜீம் உட்பட நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், தோட்ட பராமரிப்புக் குழுவின் முன்னணி செயற்பாட்டாளர்களான ஏ. ஜெஸ்மீர், எம்.ஐ. நஜீம் உட்பட தோட்டப் பராமரிப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் மஹல்லாவாசிகள்,ஜமாஅத்தினர்ணப்பலரும் இச்சிரமதான நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# காங்கேசன்துறை – நாகப்பட்டினம் படகுச்சேவை கட்டணம் குறைப்பு

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் பயணிகள் படகுச் சேவையின் இரு வழிக்கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதுடன் பயணிகள் எடுத்துச்செல்லும் பொதிகளின் நிறை அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக 'சுபம்' நிறுவனத் தலைவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் பயணிகள் படகுச் சேவையில் ஈடுபடும் 'சுபம்' பயணிகள் படகு நிறுவனத்தின் தலைவர் சுந்தர்ராஜ் யாழ்ப்பாணத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் சேவை ஆரம்பிக்கும் போது 36 ஆயிரம் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்ட இருவழிக்கட்டணம் பின்னர் 30 ஆயிரம் ரூபாவாக குறைக்கப்பட்டது.

தற்போது மீண்டும் அது குறைக்கப்பட்டு 28 ஆயிரம்ரூபாவாகநிர்ணயிக்கப்பட்டுள்ளது.அத்துடன் பயணிகள் எடுத்துச் செல்லும் பயணப்பொதியின் அளவும் 10 கிலோவிலிருந்து 22 கிலோவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுற்றுலா மேம்பாட்டிற்காக இலங்கையிலிருந்து இந்தியா செல்லும் பயணிகளுக்காக 7 வகையான புதிய சுற்றுலாப் பொதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதில் தங்குமிடம், உள்ளூர் போக்குவரத்து , இருவழி படகு போக்குவரத்து கட்டணம் அடங்கலாக 4 நாள்கள் தங்குவதற்கான கட்டணம் ஆக்க்குறைந்தது 70 ஆயிரம் ரூபாவிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன்அடுத்தமாதம்காங்கேசன்துறையிலிருந்து காலையில் புறப்படக்கூடியதான புதிய சேவையும் ஆரம்பிக்கவுள்ளது.

எனவே இச்சேவைகளை பயன்படுத்தி இரு நாடுகளையும் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் பயனடைய வேண்டும். - என்றார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.05.2025இல் வெளியிடப்பெற்றது